

# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு முன்கள வீரர்களாக இளைஞர் அணியினர் செயலாற்றும் வகையில், மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துகொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவுள்ளோம். மார்ச் 24, மற்றும் 25 ஆகிய தேதிகளில் மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெற உள்ள இந்தக்கூட்டங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆலோசனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு:–

**24.3.2026 செவ்வாய்க்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | தேனி, திண்டுக்கல் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | பி.எஸ்.என்.ஏ.மஹால், ரவுண்ட் ரோடு, திண்டுக்கல். |
| மாலை 3.00 மணி | மதுரை, விருதுநகர் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஐடா ஸ்கட்டர் அரங்கம், சிந்தாமணி, மதுரை. |
| மாலை 6.00 மணி | இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ராஹா பேலஸ், கீழகண்டனி, மானாமதுரை சாலை, சிவகங்கை. |

**25.3.2026 புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | திருநெல்வேலி - கன்னியாகுமரி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | மூன் மஹால், என்.ஜி.ஓ. குடியிருப்பு, பாளையங்கோட்டை. |
| மாலை 3.00 மணி | தூத்துக்குடி - தென்காசி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஸ்ரீ நவீரா பேலஸ், கோவில்பட்டி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 21.3.2026

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் தெற்கு பகுதி நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் நேற்று 23.03.2026 மாலை நடைபெற்ற கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மேயர்.பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, பகுதிக் கழகச் செயலாளர் எம். சாமிக்கண்ணு, என். கிருஷ்ணமூர்த்தி, இரா. வீரமணி, எம் பெரோஸ் கான், கா.ராஜா முகமது, எஸ். சசிகுமார் மற்றும் BLA2, BDA, BYO ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாட்டில் AI சுகாதார மையம் எப்போது நிறுவப்படும்?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 24-

தமிழ்நாட்டின் சுகாதார நிறுவனங்கள், ஒன்றிய அரசின் AI முன்னோடித் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளனவா? என்றும் 'செயற்கை நுண்ணறிவு சுகாதார சிறப்பு மையத்தை' தமிழ்நாட்டில் நிறுவ ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்றும் மக்களவையில் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சருக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் வருமாறு:

தமிழ்நாட்டின் சுகாதார நிறுவனங்கள், சர்க்கரை நோயால் கண்களில் ஏற்படும் பாதிப்புகளை கண்டறிய உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு செயலியான மதுநேத்ரா AI, CDSS (Clinical Decision Support System), CA-TB, கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் குரல்வழி உரையாக்கம் போன்ற AI முன்னோடித் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளனவா? சேர்க்கப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

கடந்த 5 ஆண்டுகளில் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவு சுகாதார முன்னெடுப்புகளின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? மானியம் முன்மொழியப்பட்டிருந்தால் மாநில வாரியாக அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டின் பணியாளர் பற்றாக்குறை மற்றும் ஒன்றிய அரசின் சேவைகள், கிராமப்புற மக்களுக்குச் சென்றடைவதில் உள்ள குறைகளையும் நிவர்த்தி செய்ய செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்?

தேசியத் தளங்களில் தரவுப் பாதுகாப்பு, ஒப்புதல், தமிழ் மொழி இணக்கத் தன்மை மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) பொறுப்புடைமை ஆகியவற்றிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளனவா? அவ்வாறெனில், அது குறித்த விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் 'செயற்கை நுண்ணறிவு சுகாதார சிறப்பு மையத்தை' (AI Healthcare Centre of Excellence) நிறுவ ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா? திட்டமிருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன? என்று தயாநிதி மாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில்

# தருமபுரி மேற்கு மாவட்ட வாக்குச்சாவடி முகவர்கள் - கழக நிர்வாகிகள் ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



தருமபுரி, மார்ச். 24-

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அவரவர் வாக்குச்சாவடிக்கு உட்பட்ட நமது வாக்காளர்கள் புதியதாக வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் விடுபட்டு இருந்தாலும், 01.01.2026 ல் 18 வயது பூர்த்தியாகி இன்னும் வாக்காளர்களாக இணைக்காமல் உள்ள வாக்காளர்களை கண்டறிந்து அவர்களிடம் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்களாக வாக்களிக்க மார்ச் 26 தேதிக்குள் விண்ணப்பிக்க கடைசி நாள் என்றும், தவறும் பட்சத்தில் தேர்தலில் வாக்களிக்க இயலாது என்று அவர்களிடம் எடுத்து கூறி விடுபட்டிருக்கும் வாக்காளர்கள் மற்றும் 18 வயது நிரம்பிய வாக்காளர்கள் அருகிலுள்ள இசேவை மையம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் சென்று விண்ணப்பித்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துகொள்ள அறிவுறுத்துமாறு வாக்குச்சாவடி முகவர்களையும், கழக நிர்வாகிகளையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலங்குடி சிவ.பாலகிருஷ்ணன்

**மார்ச் 24 (2007)**



தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழக பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி வட்டக் கழகத்தின் முதல் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

பாச்சிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் – புதுக்கோட்டை சமஸ்தான கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர், திருச்சி மாவட்ட நூலக ஆணைக்குழு துணைத் தலைவர், புதுக்கோட்டை அக்ரோ நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி, வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

1965 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாத சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### கீழடி உள்ளிட்ட அகழ்வாய்வுப் பணிகளை முடக்கி

# தமிழர் வரலாற்றை அழிக்க சதி!

## பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணியின் துரோகத்தை தொடர் முயற்சியால் முறியடித்தது – தமிழ்நாடு முதலமைச்சரின் சாதனை – கே.இ.பிரகாஷ் எம்.பி. பெருமிதம்!



புதுடெல்லி, மார்ச்.24-

தமிழ் நிலத்தின் தொன்மை வரலாற்றை வெளிக்கொணரும் கீழடி, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட முக்கிய அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்கு அனுமதி அளிப்பதில் ஏற்படுத்தப்பட்ட காலதாமதம் மற்றும் இதில் தொடர்ந்து காட்டப்பட்டு வரும் அலட்சியம் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய கலாச்சார அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு, 'அனுமதி இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது' என்று ஒன்றிய அரசு கூறினாலும், ஏன் இத்தனை மாதங்கள் காலதாமதம் செய்யப்பட்டது என்பதற்கு பதிலில்லை. மேற்கொண்டு, தமிழரின் வரலாறு உலக அரங்கிற்குச் செல்ல முக்கியமாக இருக்கும் ஆய்வறிக்கைகளை வெளியிடுவது போன்ற பணிகளில் காட்டப்பட்டு வரும் அலட்சியம் குறித்தும் எந்த சொல்லும் இல்லை.

1. தமிழர் வரலாற்றை மறைக்க திட்டமிட்டு காலதாமதம் செய்யப்பட்ட அனுமதி:

கீழடி, ஆதிச்சநல்லூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட 8 இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி கோரி, கடந்த ஆண்டு ஜூலை மாதமே தமிழ்நாடு அரசு விண்ணப்பித்துவிட்டது. ஆனால், தமிழ்நாட்டை ஒடுக்குவதை அமைப்பு ரீதியாக செய்துகொண்டிருக்கும் ஒன்றிய அரசு, தொல்லியல் துறை மூலம் அந்த கோரிக்கையை கிடப்பில் போட்டது.

இந்த காலகட்டத்தில், உலகத்தின் கவனம் குவிக்கப்பட்டிருக்கும் கீழடி, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட இடங்களில் அகழ்வாய்வுப் பணிகள் நின்று போயின. தமிழ்நாடு அரசின் தரப்பில், பலமுறை மீண்டும் மீண்டும் கோரிக்கை வைக்கப்பட்டும், ஒன்றிய அரசிடம் இருந்து கனத்த மௌனம் மட்டுமே பதிலாக கிடைத்தது.

2. தமிழர்களுக்கு இரண்டகம் செய்யும் எடப்பாடி பழனிசாமி தமிழர் வரலாற்றைக் காத்து சாதித்த தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சியில் இருந்தபோது கீழடி போன்ற தமிழர் வரலாற்று ஆய்வுகளுக்கு சிறு துரும்பையும் கிள்ளிப்போடாத எடப்பாடி பழனிசாமி, தற்போது பாஜக கூட்டணியில் அங்கம் வகித்தும் எந்த அழுத்தத்தையும் தரவில்லை. கூட்டணிப் பேச்சுக்காக அமித் ஷாவின் காலில் விழ டெல்லிக்குப் பறக்கும் அந்த துரோகக் கூட்டத்தினர், ஒருமுறைகூட 'கீழடி' என்ற வார்த்தையை உச்சரிக்கவில்லை.

இப்படி பா.ஜ.க. - அ.தி.மு.க. துரோகிகள் தமிழர்களை சூழ்ந்து ஒழிக்க நினைக்கும் சூழலில் தான், முதலமைச்சர் அவர்கள் தனது உறுதியான நடவடிக்கைகளால், தமிழர் வரலாற்றைக் காத்து சாதித்துக் கொண்டிருக்கிறார். கீழடி உள்ளிட்ட 8 இடங்களில் அகழ்வாய்வை மேற்கொள்ள அவர் பெற்றிருக்கும் அனுமதி, அவர் மகுடத்தில் பதிந்திருக்கும் மற்றுமொரு அருமணி!

அடுத்த கட்டமாக, தமிழ்நாடு அரசு சமர்ப்பித்து ஒன்றிய அரசு திட்டமிட்டு முடக்கி வைத்திருக்கும்கீழடி ஆய்வறிக்கையை வெளியிட வைப்பேன் என்றும் அவர் சூளுரைத்திருக்கிறார். தமிழ் மண்ணிலும் உலகெங்கிலும் இருக்கும் தமிழர்களின் ஆதரவுடன், அதை அவர் செய்து முடிப்பார்.

3. தமிழர் விரோத பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியை வரும் சட்டமன்றத் தேர்தலில் விரட்டியடிப்போம்:

கீழடி உள்ளிட்ட 8 அகழ்வாய்வுப் பணிகளுக்கு தமிழ்நாடு பெற்ற அனுமதி குறித்து இதுவரை வாய் திறக்கவில்லை எடப்பாடி பழனிசாமியும், அவர் சேவகம் செய்யும் பா.ஜ.க.வும். இது தமிழர்களுக்கு தமிழ்க்காவலரால் பெறப்பட்டிருக்கும் வெற்றி என்பதால், பொறாமையிலும் ஆற்றாமையிலும் அமைதியாகி விட்டார்கள்.

வாக்குப்பதிவு நாளில் இந்த துரோகக் கூட்டத்திற்கு கடந்த தேர்தலைவிட மோசமான படுதோல்வியை பரிசளிப்போம். முன்னோரின் ஆசி, தாய்மார்களின் நேசம், இளைஞர்களின் ஆதரவு, உழைப்பாளிகளின் அரவணைப்பு, சிறுபான்மையினரின் நம்பிக்கை, அறிவார்ந்தோரின் சம்மதம், விமர்சகர்களின் பாராட்டுகள் மற்றும் உடன்பிறப்புகளின் அன்பு ஆகிய எண்கரம் சூடி தமிழ்நிலம் காக்கும் முதலமைச்சருக்கு மீண்டும் பெருவெற்றியை முரசறிவிப்போம்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பல்லாவரம் தெற்கு செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக சார்பில் பாக தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர்கள் இ. எஸ். பெர்னார்ட் ஏ.கே.கருணாகரன், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி. ரவிச்சந்திரன், பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் மூன்று பகுதி கழக பி.டி.ஏ. க்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.